மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் முதலில் எடுத்து வைத்த வாதங்களை மறுபடியும் வலியுறுத்தி எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கியிருக்கிற அவை நல்லதா அல்லது நியமிக்கப்படுகிறவர்கள் இருக்கிற அவை நல்லதா என்ற பொதுக் கேள்வியை எழுப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிதிநிதிகள் இருக்கிற அவைதான் நல்லது. பொதுவாக நகராட்சி அமைவது நல்லதா அல்லது நகரியம் அமைவது நல்லதா என்றால் நகரசபை அமைவது நல்லதுதான். மேட்டூர் நகராட்சியாக இருப்பது நல்லதா அல்லது நகரியமாக இருப்பது நல்லதா என்றால் நகரியமாக இருப்பதுதான் நல்லது. நகரசபையாக வைப்பதற்கு சிலபல சூழ்நிலைகள் தேவைப்படுகின்றன. அதையொட்டி திட்டங்கள் வகுக்கவேண்டியிருக்கின்றது.

THIRU K. T. K. THANGAMANI: Sir, on a point of order. The Bill was brought forward by the hon. Member, Thiru Surendran and the Hon. Minister has got a right to intervene. Having intervened, the final right of reply is only to the mover of the Bill. I would like to know whether there is provision in the rules for the reply of the Hon. Minister.

MR. DEPUTY SPEAKER: Rule 75 (1) says—

" . . . . . the Minister to whose department the matter relates shall after the mover has replied, have the right of speaking whether he has previously spoken in the debate or not."

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் நான் வலியுறுத்திச் சொல்கிறேன். 89 நகராட்சிமன்றங்கள் அமைந்திருப்பதுபோன்று இதையும் ஆக்குவது கடினமானதல்ல ஆனால் சிலபல சூழ்நிலைகளையொட்டித்தான் ஆக்கவேண்டுமென்று சொன்னேன். பல்வேறு திட்டங்கள் அங்கு எடுத்துக்கொண்டதற்குக் காரணம் அது நகரியமாக அமைக்கப்பட்டதுதான். ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை பின்வாங்கிக் கொண்டால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமுன்வடிவு, பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

(ii) 1971-ம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு 44/1971.)

திரு. க. சுப்பு: பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு 44/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: I second it.

---

*9—12—71-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு பல்கலைக் கழக நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் இந்தத் திருத்த சட்டமுன்வடிவை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

ஏற்கனவே இந்தக் கருத்து பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கஜேந்திரகட்கர் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிஷன் கூட மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று கூறியிருக்கிறது. பாராளுமன்றத்தில் கூட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஜே. எம். கௌடர் இந்தக் கருத்தினை ஏற்றுக் கொண்டிருக்கிறார். பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்கிற கருத்தினை, இன்று பலரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, சென்னையில் உள்ள மாணவர்கள் ஊர்வலம் ஒன்றினை நடத்தி பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களைச் சந்தித்து மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழகத்தின் பல பகுதிகளிலுள்ள மாணவர்கள் அதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாணவர்களுக்கு அதில் பிரதிநிதித்தும் கொடுக்கப்பட வேண்டும். நிர்வாகத்தில் தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்லவும். நிர்வாகத்தில் தாங்களும் ஒரு அங்கம் என்பதை உணர்ந்து வேறு போராட்டங்கள், கிளர்ச்சிகள் இவைகளில் ஈடுபடாத அளவில், ஜனநாயக அடிப்படையில் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூற மாணவர்களுக்கு பல்கலைக் கழக நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்றும், இது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற ஒரு கருத்தாக இருக்கிற காரணத்தினாலும் இந்தத் திருத்தச் சட்டமுன் வடிவை நான் இந்தப் பேரவையின் முன் கொண்டுவந்துள்ளேன். மாணவர்களுக்கு அப்படிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்பதல்லாமல் மாணவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வேறு வழி இல்லை என்ற காரணத்தினால் கிளர்ச்சிகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை எல்லோரும் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள்: குறிப்பாக சென்னைப் பல்கலைக் கழக நகரக் கல்லூரி மாணவர்கள் மன்றம் என்ற ஒரு மன்றம் இருக்கிறது. அதற்கு பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் இல்லை. அப்படி அங்கீகாரம் இல்லாததால் அதை அங்கீகரிக்க வேண்டுமென்றுகோரி மாணவர்கள் ஊர்வலமாக வந்தார்கள். அந்த ஊர்வலம் பின்னர் கிளர்ச்சியாக மாறி அதிலே போலீஸ் தடியடி, கண்ணீர்ப் புகை என்று நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன; கல்லூரியில் இருக்கும் மாணவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையே தொடர்பு இல்லை. அரசாங்கமும் அது ஒரு 'அடானமஸ் பாடி என்று சொல்லி, அதில் தலையிடுவது கிடையாது. இப்படிப்பட்ட நிலைமைகளால் பல சந்தர்ப்பங்களில் கிளர்ச்சி ஏற்படுகிறது.

1971 டிசம்பர் 16] [திரு. க. சுப்பு]

அதோடு, கல்லூரி விடுதிகள் கட்டுதல், கட்டணம், மற்ற அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல, பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டியது உடனடியாக அவசியமாகும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

'**Nil**'.

B. *Reports, Notifications and other Papers.*

@ 74. Copy of G.O. No. 1414, Social Welfare Department, dated the 10th December 1971, in regard to constitution of State Defence Personnel's Amenities Committees.

75. Further list of names of Members of the Assembly who have given contribution to Beggar Rehabilitation Fund.

Laid on the Table of the House on 15th December 1971.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY